



நதிக்கரை வரையிலும் வாகன வசதி உள்ளது. எனவே பெரும்பாலோரும், அயல் மாநிலத்தவரும் இவ்வழியினையே தேர்ந்தெடுப்பர். பம்பை நதி கடந்து, நீலி மலை ஏறிவிட்டால் சபரிமலை அடையலாம். நீலி மலை ஏற்றத்தின் கடுமை குறையும் வண்ணம் அமைக்கப்பட்ட சுவாமி ஐயப்பன் சாலையும் தற்போது உள்ளது. எல்லோருக்கும் எளிய வழி இது.

### சாஸ்தா

'சாஸ்தா' எனும் சொல்லுக்குக் காப்பவர் என்பது பொருள். தலைமைத் தன்மை உடையவர் என்றும் பொருள் காண்பர். 'தர்மசாஸ்தா' என்றால் தர்மத்தைக் காப்பவர் என்று பொருள் கொள்ளலாம். அரிகர புத்திரனைத் தர்மசாஸ்தா எனப் பெயரிட்டு பிரம்மா வளர்த்தார். சாஸ்தாவின் அவதாரமே பந்தளத்து மணிகண்டன். பண்டைய தமிழ் இலக்கியங்களில் சாஸ்தாவைச் சாத்தனார் எனக் குறிப்பிடக் காண்கின்றோம்.

வழிபாட்டுக்குரிய திருவுருவங்களை தர்ம சாஸ்தா, வீர சாஸ்தா, மகா சாஸ்தா, ஞான சாஸ்தா, கால சாஸ்தா, சந்தான தாயக சாஸ்தா, ஸம்மோஹன சாஸ்தா எனும் அஷ்ட சாஸ்தாக்களாகக் காண்பதும் உண்டு.

தொன்று தொட்டு வந்த பல மரபுகளின் இன்னிசைவு ஐயப்ப வழிபாட்டின் தனிச் சிறப்பாகும். ஹரிஹர சக்திகளின் சாந்நித்ய இசைவு சாஸ்தா. எனவே சைவமும் வைணவமும் ஐயப்ப வழி பாட்டில் இசைவுபடுகின்றன; வரலாறும், புராணமும் ஐயப்ப வழிபாட்டில் இசைவுபடுகின்றன; நாட்டார் வழக்காறும், செவ்விய சமய நெறியும் இசைவு படுகின்றன; மலையாள நெறியும், தமிழ்நெறியும் இசைவுபடுகின்றன; இந்துப் பாரம்பரியத்தில் பௌத்தமும், இஸ்லாமும், கிறிஸ்துவமும் இசைவு கொள்கின்றன. இவ்வகையான பன்முக இன்னிசைவு நெறியாக விளங்குதலே ஐயப்ப வழிபாட்டின் தனிச்சிறப்பாகும்.

### சாஸ்தா பாட்டுகள்

மலையாளத்தில் பண்டை நாளிலிருந்து வழங்கப்பெறும் சாஸ்தா பாட்டுகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இவை 'ஐயப்பன் பாட்டுகள்' என்றும் வழங்கப்படும். இவை ஏழு சேவங்களாக உள்ளன. சேவம் என்றால் சேவகத்துவம் என்பது பொருள். பாண்டிச்சேவம், புலிச்சேவம், இளையரசு சேவம், வேளிச் சேவம், ஈழச்சேவம், பந்தளச் சேவம், வேளார் சேவம் என்பவையே அவ் ஏழு சேவங்கள். இப்பாடல்கள் உடுக்கு இசைத்துப் பாடப் பெறுபவை. இவற்றை பூதநாதோபாக்கியானத்துக்கும் பழமையானது எனக் கருதுவோருளர். இப்பாட்டுகள் ஐயப்பனைப் போர் வீரனாக வருணிக்கின்றன; பந்தள மன்னரிடமும், பாண்டிய மன்னரிடமும் பணி புரிந்தவராகப் பாடுகின்றன; கறுப்பர், வாவர் ஆகியோரை ஐயப்பனின் துணைவர்களாகச் சித்தரிக்கின்றன. உதயணன் எனும் கொடூரனை வென்ற செய்தியும் விரிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

### சின்முத்திரை

ஸ்ரீ ஐயப்பனின் வலக்கரம் சின்முத்திரை காட்டுகிறது. தெய்வீகம் நோக்கிய மானுடப் பரிணாமத்தின் உன்னத நிலை சின் முத்திரை. ஆள்காட்டி விரல் எப்போதும் தான் இணைந்திருக்கும் ஏனைய மூவிரல்களையும் நீக்கிப் பெருவிரலோடு ஒன்றிய நிலையில் அமைத்துக் காட்டுவது சின்முத்திரை. கல்லாலின் நிழலமர்ந்து தட்சிணாமூர்த்தி, சனகாதி முனிவர்க்கு உணர்த்திடும் ஞான முத்திரையும் இதுவே. ஆணவம், கன்மம், மாயை எனும் அஞ்ஞான விருத்திகளாகிய மும்மலம் தவிர்த்து ஆன்மா பரம்பொருளுடன் ஒன்றுதலே இதன் பொருள். பெருவிரல் பரம்பொருள்; ஆட்காட்டி விரல் ஆன்மா; ஏனைய மூவிரல்கள் மும்மலம். மும்மலம் விடுத்து ஆன்மா பரம்பொருளை அடைதல் முத்திரைப் பொருள். மோனத்தில் கரைதல் முத்திரைப் பயன்.

## த

### தங்க அங்கி

மண்டல பூஜையின் முந்திய நாள் மாலையில் சுவாமி ஐயப்பனின் திருவுருவம் தங்க அங்கியால் அலங்கரிக்கப்பட்டுப் பேரொளி வீசும். திருவிதாங்கூர் ஸ்ரீ சித்திரைத் திருநாள் மகாராஜாவின் காணிக்கை இத் தங்க அங்கி. சுமார் 450 பவுன் எடை கொண்டது. இது ஆரன்முழை பார்த்தசாரதி கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது. மண்டல காலத்தின் 40-ஆவது நாள் மாலை நேரத்தில் அங்கி சரங்குத்திக்கு வந்து சேரும். பின்பு ஊர்வலமாகச் சந்நிதானத்தை அடையும். வழிநெடுகிலும் வரவேற்பும், வழிபாடும் பெறும். அலங்கரிக்கப்பட்ட தேரில், பல ஊர்திகள் பின் தொடரத் தங்க அங்கி வரும் காட்சியில் பக்தர்கள் உற்சாகம் பெறுவர். வானில் கருடன் வட்டமிடும். அந்திப் பொழுதில் தர்மசாஸ்தாவின் திருமேனியில் தங்க அங்கி சார்த்தப்பட்டுத் தீபாராதனை நிகழும்.

### தர்மசாஸ்தா-கேரளக் கோயில்கள்

தர்மசாஸ்தாவின் கோயில்கள் கேரளத்திலும், பிற மாநிலங்களிலும் பலவாக உள்ளன. கேரளத்தில் பிற தெய்வங்களுக்குரிய ஆலயங்களிலும் சாஸ்தாவுக்கு சந்நிதி உண்டு. மேற்குத் தொடர்ச்சி மலையில் ஐந்து முக்கிய கோயில்கள் உள்ளன. அவை பசுராமரால் நிறுவப்பட்டவை. குளத்துப்புழையில் பாலனாகவும், ஆரியங்காவில் பிரம்மசாரியாகவும், அச்சங்கோயிலில் பூர்ணா-புஷ்கலா சமேத கிருஹஸ்தனாகவும், சபரிமலையில் வானப்பிரஸ்தனாகவும், பொன்னம்பலமேடு எனும் காந்தமலையில் யோகி எனும் ஜோதியாகவும் தர்மசாஸ்தா அருள் பாலிக்கக் காண்கிறோம்.

ஐதீகம், பக்தி, வழிபாடு என்பவை வாயிலாகத் தர்மசாஸ்தா என்னும் பெயரில் திரட்சி கொள்ளும் அற்புத சக்தி, இந்துப் பண்

## வணக்க முறைகள்

யார் யாரை எவ்விதம் வணங்கவேண்டும் என தர்ம சாஸ்திரம் சில நெறிகளைக் குறிப்பிடுகிறது.

- **சிவன்**- தலைக்கு மேல் 12 அங்குல உயரத்தில் கைகளைக் குவித்து வணங்க வேண்டும்.
- **தேவர்கள்**- தலைக்கு மேல் கையிரண்டும் குவித்து.
- **குரு**- நெற்றிக்கு நேரே இருகை குவித்து.
- **தந்தை, அரசன்**- வாய்க்கு நேராக இருகை குவித்து.
- **சான்றோர்**- மார்புக்கு நேராகக் கை குவித்து.
- **அன்னை**- வயிற்றுக்கு நேராகக் கை குவித்து.